**தலைப்பு 277 - மொனராகலை மாவட்ட செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) பிரதேச நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு

(ஆ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

(இ) கண்காணிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

(ஈ) இடர் முகாமைத்துவமும் நிவாரண நடவடிக்கைகளும்

(உ) சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்

(ஊ) அரசாங்க வருமானங்களைச் சேகரித்தல்

(எ) சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

(ஏ) மத்திய அரசாங்கத்தின் வரிசை அமைச்சுக்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் மாவட்ட அதிகாரத்தை மேற்கொள்ளல்

(ஐ) அரசாங்க சேவையினை மறுசீரமைப்பதற்கான றிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்

(ஒ) அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையினரின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தலும் ஒருங்கிணைத்தலும்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) பிபில

(ஆ) மெதகம

(இ) மடுல்ல

(ஈ) சியம்பலாண்டுவ

(உ) படல்கும்புர

(ஊ) மொனராகலை

(எ) புத்தல

(ஏ) வெல்லவாய

(ஐ) தனமல்வில

(ஒ) செவனகல

(ஓ) கதிர்காமம்

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 யூன் 19 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணைக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.4 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புத்தல மற்றும் மொனராகலை ஆகிய இரண்டு பிரதேச செயலங்களில் மீளாய்வாண்டில் பிரயாணச் செலவினம் மற்றும் இணைந்த படிகளாக ரூபா 82,775 செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த கொடுப்பனவுகள் தொடர்பான முன்கூட்டிய நிகழ்ச்சித்திட்டங்கள், திருத்திய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆற்றிய வேலைகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது நிர்வாக அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உள்நாட்டு நல்லாளுகை செயற்திட்டத்தின் கீழ் மாவட்டச் செயலகத்திற்கு 2011 திசெம்பர் 08 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 943,429 தொகையிலிருந்து ரூபா 477,429 செலவு செய்திருந்தமை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 515,849,980 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 515,127,981 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 721,999 ஆக அல்லது 0.14 சதவீதமாகக் காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவினம்** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 325,300,000 | 324,578,001 | 721,999 | 0.22 |
| மூலதனம் | 190,549,980 | 190,549,980 | - | - |
| **மொத்தம்** | **515,849,980** | **515,127,981** | **721,999** | **0.14** |

(ii) **பாதீட்டு முரண்**

---------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 04 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிலிருந்து ஏறத்தாழ 40 சதவீதமான அளவு ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது.
- நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக 05 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய ஏற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான சேமிப்பை ரூபா 5,732,402 இனால் மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

பல்வேறு செயற்பாடுகளுக்காக 24 அமைச்சுக்களிடமிருந்தும் 18 திணைக்களங் களிடமிருந்தும் ரூபா 2,271,922,739 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்ததுடன் இதில் முறையே ரூபா 1,493,501,685 மற்றும் ரூபா 631,849,034 என்ற வகையில் ரூபா 2,125,350,719 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் இறுதியளிவில் முறையே ரூபா 123,281,742 மற்றும் ரூபா 23,290,278 என்ற வகையில் ரூபா 146,572,020 கூட்டுத்தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு கிடைத்திருந்த நிதியேற்பாட்டில் முறையே 7.6 சதவீதத்திற்கும் 3.6 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் 6 பிரதேச செயலகங்களிற்காக ரூபா 3,182,650 செலவில் 820 குடும்பங்களிற்காக 8,199 கோழிக் குஞ்சுகளும் புத்தல மற்றும் தனமல்வில பிரதேச செயலக பிரிவுகளில் 113 கோழிக் கொட்டில்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 428,428 தொகையுமாக ரூபா 3,611,078 மொத்தமான தொகை செலவிடப்பட்டிருந்தது. உரிய நியமங்களின் பிரகாரம் கொட்டில்கள் அமைக்கப்பட்டிருக்காமை, தரமுள்ள கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்காமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட

தரப்பினரல்லாத வெளியாட்களிற்கு கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தமை போன்றன காரணமாக நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாது போயிருந்தது. அவ்வாறே 2012 ஆம் ஆண்டில் 10,600 நாட்டுக் கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்காக ரூபா 3,695,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்குப் பதிலாக பண்ணைக் கோழிக் குஞ்சுகளே வழங்கப்பட்டிருந்தன.

- மெதகம பிரதேச செயலகத்தில் 2013 ஆம் ஆண்டில் திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 05 ஆம் கட்டத்தின் கீழ் 07 வகையான பழக் கன்றுகள் குறித்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், வழங்குவதற்கு நிச்சயிக்கப்பட்டிருந்த கன்றுகளில் 3000 கொய்யாக் கன்றுகளும் 1388 தோடைக் கன்றுகளும், 09 சிற்றின தோடைக் கன்றுகளும் வழங்குனரால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

- 2013 ஆம் ஆண்டில் திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் V ஆம் கட்டத்தின் கீழ் செவனகல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நலனாளிகளிற்கு பகிர்ந்தளிப்பதற்காக பல்வேறு வகையான 14,029 மரக் கன்றுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நலனாளிகளிற்கு 8,834 மரக் கன்றுகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் 5,195 கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மாகாண நிதி ஏற்பாடுகளின் கீழ் செவனகல பிரதேச செயலகம் கொள்வனவு செய்திருந்த பல்வேறு வகையான 11,041 உபகரணங்களும் பொருட்களும் 2014 மார்ச் 13 ஆந் திகதி வரை குறித்த அமைப்புக்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

- பொருளாதார அமைச்சின் 03 செலவின விடயங்களின் கீழ் 12 உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டில் ரூபா 568,380 பிரயாணச் செலவினம் செலுத்தப்பட்டிருந்தது. 2013 யூன் 01 ஆந் திகதிய HAF/01/09 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் கடிதத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ

செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்கான ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கலை, கலாசார அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 39,563,098 ஏற்பாட்டினைப் பயன்படுத்தி 02 ஆம் கட்டத்தின் கீழ் மொனராகலை, படல்கும்புர மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவுகளில் 03 கலாசார நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. முதலாவது கட்டத்தில் மேடையினை சீமெந்தினால் நிர்மாணிப்பதற்கு ரூபா 70,148 தொகையும், மீண்டும் அதனை உடைத்து அகற்றுவதற்காக ரூபா 60,145 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. இதன் படி, திட்டமிட்டு செயற்பாடுகளை மேற்கொண்டிருக்காமையால் ரூபா 130,293 பயனற்ற செலவினம் செய்யப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

27701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 34,000,000 | 29,366,599 | 23,000,000 | 31,108,928 | 147,000,000 | 100,835,002 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

27701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியிலுள்ளவாறு அறவிடுதல் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 3,807,843 ஆகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுதல் சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கைகள் பின்தங்கிய நிலையில் காணப்பட்டன.

(ஈ) **பொது வைப்புக்கள் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 102,344,439 மொத்தமாக இருந்தது. 02 ஆண்டுகளிற்கும் மேலாக காணப்பட்ட ரூபா 2,816,011 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 9,049,790 தொகை குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றாது மற்றும் நிறைவேற்றிய பின்னர் எஞ்சிய தொகைகள் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தன.

## 1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

### 1.6.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மடுல்ல பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான 02 ஆம் இலக்க உத்தியோகபூர்வ இல்லம் 2013 பெப்ரவரி இலிருந்தும், உதவிப் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதி 2010 செப்தெம்பர் இலிருந்தும், ஜனபத உத்தியோகத்தரின் விடுதியும் பனை இலை நிலையக் கட்டிடமும் 2009 ஒக்தோபர் மாதத்திலிருந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டச் செயலகத்திற்குரிய 05 டபள் கெப் வாகனங்கள், 01 வான் வாகனம் மற்றும் 01 மோட்டார் சைக்கிள் மற்றும் மெதகம பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளொன்று 08 ஆண்டுகளாகவும், சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்று 09 ஆண்டுகளாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான ரூபா 25,000 விலை மதிப்பீட்டுப் பெறுமதி கொண்ட மின் பிறப்பாக்கியொன்று 20 ஆண்டு காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| | சுட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | | |
| | XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | 16,433 | அரசாங்க விடுதிகளின் நீர் பட்டியல்கள் குடியிருக்கும் உத்தியோகத்தர்களால் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்திற்குரிய 02 விடுதிகளின் நிலுவை மின்சாரப் பட்டியல்களை தீர்த்தல்களும் நீர் இணைப்பை மீண்டும் பொருத்தும் கட்டணமும் அலுவலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | |
| | (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ii ஆம் பந்தி | | ஒவ்வொரு 6 மாதத்துக்கு ஒரு முறையும் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்திற்குரிய 07 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2013 யூன் 12 ஆந் திகதிய HAF/01/09 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் கடிதம் | | வெல்லவாய பிரதேச செயலகத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்களினால் உரிய திகதியில் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை, நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடமைகள் நிச்சயித்தவாறு |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டிருக்காமை மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்ட கடமைகள் தொடர்பில் மாதாந்த எழுத்துமூலமான அறிக்கைகள் வைத்திருக்கப் பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய PF 437 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 04 பிரதேச செயலகங்களிற்குச் சொந்தமான 04 வாகனங்களிற்கு மீளாய்வாண்டிற்காக காப்புறுதிப் பூட்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| **(ஈ)** | 2013 யூலை 05 ஆந் திகதிய PCMD/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது அழிவடைந்து வரும் நிலையில் காணப்படுகின்ற பழைய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆகியவற்றை 03 மாதத்திற்குள் கைதவிர்ப்பதற்கு வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதிலும், 05 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. |
| **(உ)** | 1996 திசெம்பர் 06 ஆந் திகதிய 17/96 ஆம் இலக்க விவசாயக் காணிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் 13.4 ஆம் பந்தி மற்றும் 2005 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 01/2005 ஆம் இலக்க திருத்திய சுற்றறிக்கை | மொனராகலை பிரதேச செயலகத்தினால் மரக் கட்டையொன்றையும் கிழிக்கப்பட்ட மரத்தினையும் போக்குவரத்துச் செய்வதற்காக அனுமதிப்பத்திரத்தை வழங்குகையில் விசேட காரணங்கள் காணப்பட்டாலன்றி வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில் மரக் கட்டையொன்றை அல்லது கிழிக்கப்பட்ட மரத்தினை போக்குவரத்துச் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படக் கூடாத போதிலும், அதற்கு முரணாக 129 மரப் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

### 1.8 செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதிலுள்ள நலிவுகள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்**

02 பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்காமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொடியாகல மயில பிரம்ம ஆசிரமத்தின் ஓய்விடத்தினை அபிவிருத்தி செய்தல் | 50,000 | 2013 | தொல்பொருளியல் திணைக்கத்திற்கும் மதகுருக்களுக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்படாமை |
| சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வேரகொட விசுத்தாராம மதக்கல்வி பாடசாலையின் தர்ம மண்டப கட்டிடத்தை நிர்மாணித்தல் | 100,000 | 2013 | மதகுருவினதும் தர்மகர்த்தாக்களினதும் அர்ப்பணிப்புடைய பங்களிப்பு கிடைக்காமை |
| புத்தல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள யுதகனாவ குடியிருப்பின் 57 ஆம் இலக்கத்திற்கு அருகாமையிலுள்ள வீதியின் மதகினை நிர்மாணித்தல் | 250,000 | 2013 | மதிப்பிடப்பட்ட தொகை செயற்திட்டத்தினை பூரணப்படுத்தவதற்கு போதுமானதாகக் காணப்படாமையால் ஒப்பந்தகாரர் மறுத்திருந்தமை |
| புத்தல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புருதகொல்ல 01 நீரோடையின் நுழைவு வீதியினை புனரமைத்தல் | 200,000 | 2013 | -மேற்படி- |

**(ஆ) செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்**

வெல்லவாய பிரதேச செயலகத்தினால் நெலுள்ள குடியிருப்பில் விவசாயக் கிணறு ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 440,064 மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு 2013

நவம்பர் 01 ஆந் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நலனாளிகள் தரப்பிலிருந்து கிடைக்கவேண்டிய ஊழியப் பங்களிப்பு கிடைக்கப்பெறாமை காரணமாக செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன.

**(இ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதிலுள்ள நலிவுகள்**

செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பிலான தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மடுல்ல பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதியினை நிர்மாணிப்பதற்காக 2013 யூன் 25 ஆந் திகதி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு பெறுமதிசேர் வரி அடங்கலாக ரூபா 8,324,982 உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரை ஒப்பந்தக்காரருக்கு ரூபா 7,907,833 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 18 ஆந் திகதி வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த இந்த உத்தியோகபூர்வ விடுதியின் J 01, J 02 மற்றும் FG 01 ஆம் இலக்க விடயங்களின் கீழ் சட்டகங்களுடன் கூடிய 09 கதவுகளை பொருத்துவதற்காக ரூபா 449,927 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 மே 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் 09 Fit Panel கதவுகளுக்கு பொருத்தப்பட்டிருந்த பலகைகள் உரிய விதத்தில் நெருக்கமாக பொருத்தப்பட்டிருக்காமையால் கதவுகளின் பலகைகளுக்கிடையே அதிகளவு இடைவெளிகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், விடுதியின் முதலாவது மாடியில் அமைந்துள்ள பெல்கனியின் தரை பூச்சிட்டு வெள்ளை இடப்பட்டிருக்கவில்லை.

(ii) தனமல்வில பிரதேச செயலக கணக்காளரின் உத்தியோகபூர்வ விடுதியினை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ரூபா 7,566,015 செலுத்தப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையில்,

- யன்னல்களின் கண்ணாடி பொருத்திகள் குள்ளான்களால் சேதமாக்கப்பட்டிருந்தமை
- கிரீல்கள் பொருத்தப்பட்டிருக்காமை
- பெல்கணியின் இரும்பிலான கைப்பிடிகள் துருப்பிடிக்காதிருக்க தீந்தை பூசப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 இன் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழ் மொனராகலை பிரதேச செயலகத்தினால் ரூபா 515,394 செலவிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த

03 செயற்திட்டங்களின் பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **செயற்திட்டம்** | **பெறுமதி** | **அவதானிக்கப்பட்ட விடயம்** |
|---|---|---|
| | ரூபா | |
| பொருட்களை கொள்வனவு செய்தல் | 41,182 | 2013 நவம்பர் 20 ஆந் திகதி வரை கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்கள் நலனாளிகளிற்கு பகிர்ந்தளிக்கப்படாதிருந்ததுடன் அப் பொருட்கள் பல்வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. |
| வெல்லஸ்ஸ விவசாயிகள் நலன்புரி சங்கத்திற்கு புளொக் கல் அரிதல் இயந்திரமொன்றையும் தானியங்களை அரைக்கும் இயந்திரமொன்றையும் கொள்வனவு செய்தல் | 95,002 | • பொருளாதார அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் 2013 மார்ச் 28 ஆந் திகதிய MED/RD/DCB/GEN/13 ஆம் இலக்க கடிதத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் கூறுவிலைகள் கோரப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>• அரைக்கும் இயந்திரம் தனியார் மிளகாய் ஆலையொன்றில் பொருத்தப்பட்டிருந்ததுடன், புளொக் கல் அரிதல் இயந்திரம் தனியார் இடமொன்றில் காணப்பட்டது. |
| 06 விவசாய அமைப்புக்களிற்கு 413 மண்வெட்டிகளை வழங்குதல் | 359,310 | திட்ட அமுலாக்கல் அமைச்சு செயலாளரின் 2009 மார்ச் 03 ஆந் திகதிய MGI/DCB/3 ஆம் இலக்க சுற்றறிக்கையில் உள்ளடங்கயிருந்த 3.1.3 பட்டியலின் படி கொள்வனவு செய்யப்படுகின்ற விவசாய உபகரணங்கள் கமநல சேவை நிலையங்களின் ஊடாக விவசாய அமைப்புக்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| ஊவ வெல்லஸ்ஸ விவசாய அமைப்புக்கு தொலை நகல் இயந்திரமொன்றையும் ரோலர் ஒன்றையும் வழங்குதல் | 19,900 | 2013 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையில் குறித்த தொலை நகல் இயந்திரத்தை கணக்காய்வுக்குச் சமர்ப்பிப்பதற்கு முடியாது போயிருந்தது. |
| | ----------------- | |
| | 515,394 | |
| | ======== | |

(iv) ‘‘ஜாதிக சவிய கமநெகும’’ தேசத்தின் சக்தி கிராம எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கவுடாவ மஹவெல குளக்கட்டினை புனரமைப்பதற்காக 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மொனராகலை பிரதேச செயலகத்திற்கு ரூபா 2,400,000 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 2,375,231 செலவிடப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதியளவில் கால்வாயின் மீது முழுமையாக காடுபடர்ந்து காணப்பட்டதுடன் கால்வாயிலிருந்து பயிர்ச்செய்கை நிலங்களிற்கு நீரை வழங்க முடியாத நிலையேற்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணங்களின் பரிசோதனையில் செய்யப்படாத வேலைகளிற்காக ரூபா 296,779 தொகையும், விபரங்கள் சமர்ப்பிக்கப்படாத வேலைகளிற்காக ரூபா 27,645 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(v) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தேசத்தை கட்டியெழுப்புதல் அமைச்சின் ஏற்பாடுகளிலிருந்து கிராமத்திலுள்ள சகல அரசாங்க நிறுவனங்களையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவரும் நோக்குடன் ரூபா 3,922,914 தொகை வெல்லவாய பிரதேச செயலகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்டிருந்த ‘‘மக்கள் மன்ற அலுவலக இல்லம்’’ 2013 நவம்பர் 14 ஆந் திகதி வரை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாதிருந்ததுடன், கட்டிடம் இயற்கை அனர்த்தங்களிற்கு உட்பட்டிருந்தது. அத்துடன், 2013 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருத்தங்களிற்காக ரூபா 145,500 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 14 ஆந் திகதியளவில் ரூபா 56,578 தொகை சமுர்த்தி படையணி ஒன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(vi) 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெல்லவாய பிரதேச செயலகம் கொள்வனவு செய்திருந்த 574 பொருட்களையும் உபகரணங்களையும் பகிர்ந்தளிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 07 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2012 மற்றும் 2013 இன் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மெதகம பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பல்வேறு வகையான 1265 உபகரணங்களை பகிர்ந்தளிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(viii) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் அடிப்படையில் கரமெடிய குரத்வ நீர் வழங்கல் திட்டத்திற்காக நீர் வழங்கல் உபகரணங்கள் மற்றும் நீர்மானிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மெதகம பிரதேச செயலகத்தினால் ரூபா 134,010 தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. 2013 நவம்பர் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் அதுவரை ரூபா 22,950 தொகைக்கு 17 நீர்மானிகளும் ரூபா 4,255 பெறுமதியான 23 நீர்வழங்கல் உபகரணங்களும் குறிப்பிட்ட செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த கொடபோவ நீர் வழங்கல் திட்டத்தின் நீர் இயந்திரம் கிணற்றினுள் விழுந்தமையால் 2008 ஆம் ஆண்டின் பின்னர் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் திருத்தல் வேலைகளிற்காக ரூபா 531,552 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரை அது செயற்படாதிருந்தமை காரணமாக அதிக வரட்சி காலங்களில் மெதகம பிரதேச செயலகத்தினால் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் நீரை வழங்குவதற்காக ரூபா 202,926 செலவிடப்பட்டிருந்தது.

(x) 2012 இன் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் பிரமாண அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விளையாட்டுச் சங்கங்களிற்கு வழங்குவதற்காக உரிய மதிப்பீடின்றி ரூபா 148,210 செலவிடப்பட்டு செவனகல பிரதேச செயலகத்தினால் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு

செய்யப்பட்டிருந்தன. அந்த விளையாட்டு உபகரணங்கள் குறித்த சங்கங்களிற்கு வழங்கப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மென்பந்து கிரிக்கற் மட்டைகள் சேதமடைந்திருந்தன.

(xi) உள்நாட்டு நல்லாளுகை செயற்திட்டத்தின் கீழ் 03 மற்றும் 05 ஆம் மட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் அச்சிடல் நடவடிக்கைகளிற்கும் ஏனைய கருமங்களிற்குமாக 2011 திசெம்பர் 08 ஆந் திகதி ரூபா 943,429 தொகை பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அத் தொகையிலிருந்து ரூபா 466,000 தொகை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 219,524 முறையான அங்கீகாரமின்றி 03 பிரதேச செயலகங்களை வலைப்பின்னல் செயவ்தற்காக 2013 திசெம்பர் 28 ஆந் திகதி ஸ்ரீ லங்கா ரெலிகொம் இற்கு செலுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி மீண்டும் செயற்திட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

## 1.9 மிகைக் கொடுப்பனவுகள்

தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் உப பிரிவுக்கு முரணாக, இரண்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் மூன்று நிர்வாக உத்தியோகத்தர்களிற்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 335,759 தொகையான பதிற்கடமை/பணிகள் நிறைவேற்றல் படிகளை மீள அறவிடுவதற்கு 2014 யூன் 10 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட முறையற்ற தன்மையான கொடுக்கல்வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறைகளிலிருந்து விலகுதல்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 3.4.1 மற்றும் 2.14.1 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம் பிரதேச கொள்வனவுச் சபைக்கு சந்தை விலைகள் ஒப்பீட்டு முறையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு முடியுமான உச்ச எல்லை ரூபா 500,000 ஆன போதிலும், மெதகம பிரதேச செயலகத்தினால் 2013 யூன் 26 ஆந் திகதிய 04 ஆம் இலக்க கொள்வனவுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 993,735 பெறுமதியான அறநெறி பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) மொனராகலை மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டின் மீது விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு கணனி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பயிற்சினை பெற்றுக்கொடுப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 24,625 செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டின் மீது ஏனைய அமைச்சின் உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

(ii) மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்துடனும் வாடகை அறவிடப்படாதும் பயிற்சி நிலையமொன்றாகவும் ஒருங்கிணைப்பு அலுவலகமொன்றாகவும் நடாத்திச் செல்லப்படுகின்ற மொனராகலை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ விடுதி 2012 இன் பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 200,000 ஏற்பாட்டிலிருந்து ரூபா 180,000 செலவிடப்பட்டு திருத்தப்பட்டிருந்தது.

(iii) 2013 மார்ச் 06 ஆந் திகதி மொனராகலை நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தேசிய மகளிர் தின விழாவில் சமுர்த்தி நலன்பெறும் பெண்களிற்கு காலை உணவினை வழங்குவதற்காக செலவிடப்பட்ட தொகையினை மீள்நிரப்புதவற்காக ரூபா 310,000 தொகை மொனராகலை மாவட்ட சமுர்த்தி படையணி / சமூக அபிவிருத்தி மன்றம் மற்றும் கிராமத்திலுள்ள சங்கங்களிலிருந்து பிரதேச செயலகத்தினூடாக சேகரிக்கப்பட்டு மொனராகலை மாவட்ட உதவி சமுர்த்தி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மொனராகலை மாவட்ட சமுர்த்தி படையணி / சமுர்த்தி கிராமிய சங்கங்களிலிருந்து பணங்களை அறவிடுவதற்கான இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் 2009/05 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் பே.மு.அ. 2013/05 ஆம் இலக்க உள்ளக வழிகாட்டல்கள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

- நிதிப்பிரமாணம் 168(1) இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்திற்காக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு அரசாங்க கணக்கில் வைப்பச்செய்யப்பட்டிருக்கவில்லை.
- பங்குபற்றிய நலனாளிகளின் பதிவேடொன்றின்றி மற்றும் மாவட்டச் செயலாளர் அங்கீகரிக்காது மாவட்ட சமுர்த்தி படையணி மற்றும் சமுர்த்தி கிராமிய சங்கங்களிலிருந்து ரூபா 310,000 தொகை மூன்று வழங்குனர்களிற்கு காசோலையைப் பயன்படுத்தாது காசாக செலுத்தப்பட்டிருந்தது.

## 1.11 நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருடங்களாக ஒதுக்கீட்டுக் கணக்கின் டீஜீஎஸ்ஏ 7 படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்த 07 பிரதேச செயலங்களுக்குரிய ரூபா 4,018,203 கூட்டுத் தொகைக்கான 18 வாகன விபத்துக்கள் தொடர்பில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்கள் தொடர்பில் இடம்பெற்றிருந்த 04 வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது சேதமடைந்து வரும் நிலையில் காணப்படுகின்ற 04 வாகனங்கள் 02 முதல் 04 ஆண்டுகள் வரையான காலவீச்சில் மாவட்ட திட்டமிடல் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அந்த வாகனங்களில், 03 வாகனங்களுக்கு சிறியளவு சேதங்களே ஏற்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணை மேற்கொண்டு நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வாகனங்களை இயக்குவதற்கு முடியாதுள்ளதாக 2013 செப்தெம்பர் 10 ஆந் திகதி மோட்டார் வாகன பரிசோதகரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. 2013 யூன் 05 ஆந் திகதிய PCMD/PR//2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் படி இந்த வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கெப் வாகனமொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 29 ஆந் திகதி நெலுள்ள குடியிருப்பில் விபத்துக்குள்ளாகியிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 24 ஆந் திகதி வரை நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபத்துக்குள்ளான வாகனத்தின் சாரதிக்கு

2014 ஏப்ரல் 24 ஆந் திகதி வரை கடமைகளில் ஈடுபடுத்தாது அக் காலத்திற்காக சம்பளமாக ரூபா 100,878 செலுத்தப்பட்டிருந்தது.

## 1.12 முகாமைத்தவ பலவீனங்கள்

பின்வரும் முகாமைத்தவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி இடம்பெற்ற முன்னைய அரசாங்கத்தின் அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டத்தில் 2005, 2006, 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆண்டுகளிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் கலந்துரையாடப்பட்டன. அதன்போது மேற்கொள்ளப்பட்ட குழுத் தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளை செயற்படுத்தவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புத்தல பிரதேச செயலகத்தின் ஜய பூமி உறுதிப்பத்திர காணிகளில் மரங்களை வெட்டுவதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் 2011 நவம்பர் 16 ஆந் திகதிய 2011/06 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றாது குடியிருப்பு உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தரின் பரிந்துரையின் அடிப்படையில் ஜய பூமி உறுதிப்பத்திர காணிகளில் மரங்களை வெட்டுவதற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) காணிகள் வழிகாட்டல் கோவையின் 227 ஆம் பிரிவின் பிரகாரம் 1946 இன் 08 ஆம் இலக்க அரசுடைமையாக்கப்பட்ட காணிகள் கட்டளைச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடாது பொது நீர் வழிகளின் இரண்டு பக்கங்களிலுமுள்ள குறித்துரைக்கப்பட்ட அளவான காணி பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசம் என சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் கவனம் செலுத்தாது நில அளவையாளர் அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் 05 கும்புக் மரங்களிற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 03 மரங்கள் அரசாங்க காணியிலுள்ள மரங்களாகும் என நிள அளவையாளர் அறிக்கையிலிருந்து பின்னர் தெரிய வந்தது.

(ஈ) கதிர்காமம் எசல விழாவின் மின்சாரத்திற்காக திறைசேரியிடமிருந்து அதற்காக ஏற்பாட்டை ஒதுக்கிக்கொள்ளாது 2009 முதல் 2013 ஆம் ஆண்டு வரை பல்வேறு செலவின விடயங்களின் கீழ் செலவுகள் செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதற்காக மின்சார சபைக்கு ரூபா 5,517,471 செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(உ) கதிர்காமம் எசல விழாவின் புனித நகரத்தையும் அதனை அண்மித்த பகுதிகளையும் வெளிச்சமூட்டுதவற்காக மேலதிக மின்சாரத்தை வழங்கியமைக்காக 2009 முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 26,580,120 தொகை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக விபரமான மதிப்பீடொன்றும் மேலதிக மின்சார வசதியினை வழங்கும் இடமும் தொடர்பில் அண்ணளவான திட்டமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாவட்டச் செயலகத்திற்கு உரித்தாக 02 உத்தியோகபூர்வ வாகனங்களும் 06 குழாம் வாகனங்களும், அதற்கு மேலதிகமாக பேரூந்தொன்றும் லொறியொன்றும் பயணங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அங்கீகரிக்கப்பட்ட மற்றும் காணப்படுகின்ற பதவியணியினரின் படி சேர்த்துக்கொள்ளப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 05 ஆக இருந்தது. நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் காணப்படுகின்ற வாகனங்களிற்கமைய சாரதி பதவிகளை அங்கிகரித்துக்கொண்டு சாரதிகளை வாகனங்களில் ஈடுபடுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சமுர்த்தி வாழ்வாதார சுழற்சி கடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை சமுர்த்தி வங்கியிலிருந்து வழங்கப்பட்டிருந்த கடன்களில் 10 பிரதேச செயலகங்களிற்குரிய ரூபா 16,967,952 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிடுதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(ஏ) அரசாங்க வீடுகள் அமைந்துள்ள காணிகளை தீர்ப்பனவு செய்து நில அளவையினை மேற்கொண்ட பின்னர் குறித்த காணி வரைபடங்களைத் தயாரித்து காணிகளின் உரிமையினை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சில வீடுகளிற்கு உரித்தான காணிகளில் பெருமளவு அனுமதியின்றிய நிர்மாணங்கள் இடம்பெற்றுவருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) மொனராகலை பிரதேச செயலகத்திற்குரிய 03 கிராம சேவையாளர் பிரிவுகளில் 10 பேர்ச் வீதம் 30 நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்கு 2011 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ரூபா 190,000 கிடைத்திருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 22 ஆந் திகதி வரை குறித்த பணி நிறைவேற்றப்படாது பணம் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) மாவட்ட திட்டமிடல் செயலகத்திற்குச் சொந்தமான 12 அரசாங்க விடுதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்பட்டன.

| விடுதிகளின் வகை | குடியிருப்போரின் பதவி | குடியிருந்த காலம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| | | ஆண்டுகள் | |
| பட்டோலையிட ப்பட்ட | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 06 | 04 உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் குடியிருக்கின்றமை. |
| பட்டோலையிட ப்பட்ட | தேசிய மாணவர் படையணி | 03 | 2011 மார்ச் 22 ஆந் திகதியிலிருந்து தேசிய மாணவர் படையணியக்கு 2 ஆண்டு காலத்திற்காக கையளிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த தரப்பினர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாதிருந் ததுடன் ரூபா 2,850 வீதம் மாதாந்த பொருளாதார வாடகையினை அறவிடுவதற்கு 2013 ஏப்ரல் 21 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| பட்டோலையிட ப்படாத | முகாமைத்துவ உதவியாளர்/ அபிவிருத்தி உதவியாளர், அலுவலக உதவியாளர் | 05 முதல் 24 ஆண்டுகள் வரை | விண்ணப்பித்திருந்த 06 உத்தியோகத்தர் களிற்கு விடுதிகள் வழங்கப்படாது நீண்ட காலமாக ஒரே உத்தியோகத்தர் குடியிருந்து வருகின்றமை |
| பட்டோலையிட ப்பட்ட | முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் | 23 | ஓய்வுபெற்ற உத்தியோகத்தரால் முறைப்படியாக விடுதி கையளிக்கப்பட் டிருக்காமை மற்றும் ரூபா 3,400 விடுதி வாடகை அறவிடப்பட்டிருக்காமை |

## 1.13 மனிதவளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 34 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 22 | 06 | 16 |
| (iii) | இரண்டாம் நிலை | 707 | 541 | 166 |
| (iv) | ஆரம்ப நிலை | 110 | 98 | 12 |
| (v) | ஏனையோர் (அமைய) | - | 04 | - |
| | மொத்தம் | 880 | 683 | 201 |

(ஆ) ஏனைய அமைச்சுக்களின் கீழ் மாவட்டச் செயலகம் மற்றும் ஏனைய சகல பிரதேச செயலகங்களிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக சிரேஷ்ட நிலையில் 11 பதவியணியினரும், இரண்டாம் நிலையில் 744 பதவியணியினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரமும் 1993 ஒக்தோபர் 07 ஆந் திகதிய உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் ஈ/2/பிணை ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரமும் பொருட்கள் மற்றும் பணத்திற்குப் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் காசோலைக்கு கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர்கள் பிணைகளை வைக்கவேண்டிய போதிலும், செவனகல பிரதேச செயலகத்தின் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த விதத்தில் ரூபா 30,000 பாதுகாப்பு பிணைத்தொகை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் 1991 செப்தெம்பர் 09 ஆந் திகதிய பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் ஈ/2/30 (i) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செவனகல பிரதேச

செயலகத்தின் 03 கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 3,000 பாதுகாப்பு பிணை வைப்புத்தொகை பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒப்பந்த அடிப்படையின் கீழ் மொனராகலை மாவட்ட செயலகத்தில் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள ஊழியருக்கு 2010 ஏப்ரல் முதல் 2014 மே வரை பாராளுமன்ற அலுவல்கள் பெண் அமைச்சரின் பதவியணியில் முகாமைத்துவ உதவியாளராகவும், மொனராகலை அனர்த்த முகாமைத்துவ பிரிவில் அனர்த்த முகாமையாளர் பதவியிலும் பணியாற்றுவதற்கு நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த நபரினால் இரண்டு பதவிகளும் வகிக்கப்பட்டு அப்பதவிக் காலத்தில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,913,757 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக அவருக்குரிய அரசாங்க சேவை சேமலாப நிதியப் பங்களிப்பாக ரூபா 184,254 அந்த நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.